# அனைவருக்கும் தந்தையன்றோ!

தன்புதல்வன் தமிழாலே
அவன்புகழை நான்கேட்டேன்!
என்தவமோ? எதன்பயனோ?
இத்தகையோர் நட்புகிட்ட!

தனித்தமிழன் தலைநிமிர
தனைத்தந்த கவிஞனவன்!
தன்னடக்கம் நிறைந்தாலும்
தன்மானக் கவிஞனவன்!

நாமக்கல் கவிஞனவன்
நாமகளின் தவப்புதல்வன்!
நாவினிக்கும் தமிழாலே
நலம்நல்கும் கவிதந்தான்!

அவன்கவியில் உயிர்ப்புண்டு
அதனாலே உயர்வுண்டு!
அவனியிலே உயர்கவிஞன்
அனைவருக்கும் தந்தையன்றோ!

- சோ.சுப்பிரமணி
6/16/2008